[1st November 1958

SRI V. K. KOTHANDARAMAN : எஸ்.பி.ஸி.ஏ. அதிகாரிகளால் கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு மிகவும் தொல்லை ஏற்படுகிறது லஞ்சம் கொடுத்து தண்டக் கட்டிக்கொண்டு போகவேண்டியிருக்கிறது என்கிற காரணத்தினால் அவர்களை எடுத்துவிட்டு கால்நடை ஆஸ்பத்திரிகளை அதற்குப் பதிலாக ஏற்படுத்த முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTHAVATSALAM : எஸ்.பி.ஸி.ஏ. அவர்கள் பிராணிகளுக்கு இம்சை செய்வதைத்தான் தடுக்க இருக்கிறார்கள். அது வேறு ஸ்தாபனம். அது சில பேருக்குப் பிடிக்கவில்லை என்றால் வெறுப் பாகத்தான் இருக்கிறது.

Utilization of the River waters in the Palni Hills for Power Supply

* 786 *Q.*— SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) பழனி மலைத்தொடரில் உற்பத்தியாகும் நதிகளிலிருக்கும் தண் ணீரை மின்சார உற்பத்திக்கு உபயோகப்படுத்துவதற்கு ஏதேனும் ஏற் பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) No, Sir. Investigations have indicated that the water resources in the streams of the Palni Hills are very limited and consequently the quantum of power that can be generated is also very small. The scheme is not also likely to prove remunerative.

SRI N. R. THIAGARAJAN : பாலாறு புரந்தலாறு என்னும் பகுதியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று முன்பு அறிக்கையில் சொன்னார்கள். எவ்வளவு கிலோவாட் உற்பத்தி செய்யப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : அப்போது நான் கொடுத்த பதில் இன்வெஸ்டிகேஷன் நடந்து கொண்டிருப்பது என்பதுதான். அதன் முடிவை இப்போது சொன்னேன். அங்கே மின் உற்பத்திக்குப் போதுமான தண்ணீர் வசதி கிடையாது. அதிகமான மின்சாரம் அங்கே எடுக்க முடி யாது என்கிறார்கள்.

SRI A. V. P. ASAITHAMBI : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்படுவதாக திராவிட முன்னேற்றக் கழகம் குற்றம் சாட்டிக்கொண்டு வரும்போது அமைச்சர் அவர்கள் தென்னாட்டில் திட்டம் போடுவதற்குப் பெரிய நதிகள் இருக்கிறதாவென்று கேட்டிருக்கி றார்கள்.

MR. SPEAKER : உங்கள் கேள்விக்கும் மூல கேள்விக்கும் சம்பந்தம் இருப்பது போலவே தெரியவில்லையே.

SRI A. V. P. ASAITHAMBI : சம்பந்தம் இருக்கிறது. இந்த மலையி லிருந்து உற்பத்தியாகும் நதிகளின் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவேண் டும் என்று இந்த அரசாங்கம் சொன்ன யோசனையை மத்திய அரசாங்கத் தார் புறக்கணித்துவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAA H : கனம் அங்கத்தினரைச் சேர்ந்த கட்சியினர் எல்லாத் துறையிலும் வட நாட்டால் தென்னாடு புறக்கணிக் கப்படுவதாகச் சொல்வதுதான் வழக்கம். ஆனால் இந்த மின்சாரத்தைப் பொருத்த வரையில் இந்த மாகாணத்தில் உற்பத்தியாவதை வேறு எந்த மாகாணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் கண்டிப்பாக நம் மாகாணம்தான் எல்லாவற்றிற்கும் முன்னிலையில் இருக்கிறது என்பது அவர்களுக்கே தெரிய வரும்.